புதுச்சேரி அரசு

கல்வித் துறை

பள்ளிக் கல்வி இயக்ககம்

மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்

இலாசுப்பேட்டை, புதுச்சேரி – 605 008



# ஆசிரியர் கல்விபட்டயப் படிப்பு (**D.El.Ed.**)

தகவல் குறிப்பேடு : 2022-2023

புதுச்சேரி அரசு

கல்வித் துறை

பள்ளிக் கல்வி இயக்ககம்

மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்

இலாசுப்பேட்டை, புதுச்சேரி – 605 008

## ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு (**D.El.Ed.**)

## தகவல் குறிப்பேடு : 2022– 2023

புதுச்சேரி அரசு, கல்வித் துறையில் பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கிவரும் புதுச்சேரி மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தில் 2022-2023 ஆம் ஆண்டிற்கான இரண்டாண்டுகள் ஆசிரியர் பட்டயப் படிப்பு வகுப்புச் சேர்க்கைக்கு, புதுச்சேரி யூனியன் ஆட்சிப் பரப்பைச் சேர்ந்த மாணவ மாணவியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**சேர்க்கைக்கான கல்வித் தகுதி**

மேனிலைப் பள்ளிப் பொதுத் தேர்வில் (+2) அல்லது அதற்குச் சமமான தேர்வில் குறைந்தபட்சம் 50% மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். எனினும், அட்டவணை இனத்தவர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் குறைந்தபட்சம் 45% மதிப்பெண் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதுவரம்பு**

சேர்க்கைக்கான அதிகபட்ச வயது 29 ஆகும். 31.07.2022 அன்று முடிய 29 வயதுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். எனினும், அட்டவனை இனத்தவருக்கு 5 (ஐந்து) ஆண்டுகளும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 3 (மூன்று) ஆண்டுகளும் வயதுவரம்பில் சலுகை உண்டு.

***முக்கிய குறிப்பு***: இப்பட்டயப் படிப்பில், இரண்டு ஆண்டுகளிலும் தமிழ் பாடத்தை ஒரு தேர்வாக கட்டாயம் அனைவரும் எழுதவேண்டும்.

**விண்ணப்பம் கிடைக்குமிடம்**

மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், இலாசுப்பேட்டை, புதுச்சேரி-605 008.

**விண்ணப்பம் வழங்கப்படும் காலம்**

சேர்க்கை விண்ணப்பம் ஜுலை மாதம் 06-ஆம் தேதி முதல் ஆகஸ்டு மாதம் 05-ஆம் தேதிவரை, அனைத்து அலுவலக வேலை நாட்களிலும் புதுச்சேரி, இலாசுப்பேட்டை, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் கிடைக்கும். பள்ளிக் கல்வித்துறை இணையதளத்திருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய நகல் சான்றிதழ்கள்:**

1. இறுதியாகப் பயின்ற கல்வி நிறுவனத்தின் மாற்றுச் சான்றிதழ் (TC)
2. 12-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (Mark Certificate)
3. 10-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (Mark Certificate)
4. PIC-Renewed அல்லது குடியுரிமைச் சான்றிதழ், குடியிருப்புச் சான்றிதழ், இனச் சான்றிதழ்.
5. சிறப்பு இட ஒதுக்கீட்டிற்கான சான்றிதழ் (தகுதி இருப்பின்)

சான்றிதழ்களின் நகல் மற்றும் நிழற்படத்தின் மீது சுய சான்றொப்பம் (Self attestation) இட வேண்டும்.

*குறிப்பு:* அசல் சான்றிதழ்களை (Original) இணைத்தல் கூடாது.

**சேர்க்கை வழிமுறை:**

1. மொத்த இடங்களின் எண்ணிக்கை 100
2. விண்ணப்பங்களை ஆய்வு செய்த பின்னர், பாடப் பிரிவின் அடிப்படையில் மதிப்பெண் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும்.
3. பின்னர் பாடப்பிரிவின் மதிப்பெண் தரவரிசைப் படியும், இட ஒதுக்கீட்டிற்கான அரசு வழிநெறி முறைகளின் படியும், ஒவ்வொரு பாடப் பிரிவுக்கும் தெரிவுப் பட்டியல் (Selection list) வெளியிடப்படும்.
4. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணலுக்கான தகவல் அனுப்பப்படும்.
5. இட ஒதுக்கீடு (*அரசுவழிகாட்டு நெறிமுறைகளின்படி மாறுதலுக்கு உட்பட்டது)
6. பாடப் பிரிவுக்கான இட ஒதுக்கீடு

| | |
|---|---|
| அறிவியல் பாடப் பிரிவு | 50% |
| கலைப் பாடப் பிரிவு | 30% |
| தொழிற்கல்வி பாடப் பிரிவு | 20% |

7. இன இட ஒதுக்கீடு
8. செங்குத்து ஒதுக்கீடு (Vertical Reservation)

| | | |
|---|---|---|
| 1. | அட்டவணை இனத்தவர் (SC) | 16 % |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) | 18 % |
| 3. | அதிமிக பிற்படுத்தப்பட்டோர் (EBC) | 02 % |
| 4. | பிறபிற்படுத்தப்பட்டோர் (OBC) | 11 % |
| 5. | பிறபிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்(BCM) | 02 % |
| 6. | பிற்படுத்தப்பட்ட பழங்குடியினர் (BT) | 0.5 % |
| 7. | மலைவாழ் இனத்தவர் (ST) | 0.5 % |

9. கிடை ஒதுக்கீடு (Horizontal Reservation)

| | | |
|---|---|---|
| 1. | விடுதலைப் போராட்டவீரர்கள் வாரிசு | 4 % |
| 2. | மாற்றுதிறனுடையோர்(PH) | 5 % |
| 3. | முன்னாள் இராணுவத்தினர் வாரிசு | 3 % |
| 4. | சிறந்த விளையாட்டு வீரர் | 1 % |

நேர்காணல் (**Interview**)

1. நேர்காணலின்போது, விண்ணப்பதாரர் தங்கள் பெற்றோருடனோ அல்லது பாதுகாவலருடனோ (பெற்றோர் இல்லாதோர் மட்டும்) கலந்தாய்வில் பங்குபெறவேண்டும்.
2. நேர்காணலின் போது, அனைத்து அசல் சான்றிதழ்களையும் (Originals) ஒப்படைக்கவேண்டும். இல்லையெனில் சேர்க்கை வாய்ப்பை இழக்க நேரிடும்.
3. வேறுபடிப்புகளில் சேர்ந்திருப்போருக்கு அசல் சான்றிதழ் இல்லையெனில், அக்கல்வி நிறுவனத்தின் படிப்புச் சான்றிதழ் (Study Certificte) மற்றும் சான்றிதழ்களின் நகல்களுடன் நேர்காணலில் பங்குபெற வேண்டும்.
4. சேர்க்கையை உறுதி செய்த பின்னர், அசல் சான்றிதழ்களை ஒப்படைத்து, உரிய கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். இல்லையெனில்,அத்தகைய விண்ணப்பதாரருக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்படமாட்டாது.

பொது:

1. நேர்காணல் மற்றும் சேர்க்கைக்குப் பின்னர் அசல் சான்றிதழ்களைத் திரும்பப் பெறவியலாது. எனவே விண்ணப்பதாரர் அனைவரும் தேவையான அளவு அசல் சான்றிதழ்களின் நகல்களை (Xerox) எடுத்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
2. நேர்காணலுக்கு விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்த செலவில் வருகை தருதல் வேண்டும்.
4. சேர்க்கைக்குப் பின்னர், வேறுபடிப்பிற்குச் செல்வோர்க்கு சேர்க்கைக் கட்டணம் திரும்பத் தரப்படமாட்டாது.

***

விண்ணப்ப எண்:

பதிவுஎண்:

# பள்ளிக் கல்வி இயக்ககம்
# மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்
# இலாசுப்பேட்டை, புதுச்சேரி– 605008
# தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு (D.El.Ed.)விண்ணப்பப் படிவம் 2022-2023

| Science | Arts | Vocational |
|---|---|---|
| | | |

குறிப்பு:

(1) அனைத்துத் தகவல்களுக்கும் தக்க நகல் சான்றிதழ்களை இணைக்கவும்.

(2) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 05-08-2022

நிழற்படம்

(பள்ளி முதல்வர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் ஒப்பம்)

1. விண்ணப்பதாரரின் பெயர் (தமிழில்) :.......................................................

(ஆங்கிலத்தில்) :.......................................................

2. தந்தை பெயர் :.......................................................

3. தாய் பெயர் :.......................................................

4. பாதுகாவலர் பெயர் (பெற்றோர் இல்லையெனில்) :.......................................................

5. பாலினம் : ஆண் / பெண்

6. பிறந்த தேதி : நாள் ☐☐ மாதம் ☐☐ வருடம் ☐☐☐☐

7. வயது 31.07.2022 அன்று முடிய : ☐☐ வருடம் ☐☐ மாதம்

8.மேனிலைப் பொதுத் தேர்வு எழுதிய விவரம்

| தேர்வு எழுதிய கல்வி வாரியம் & தேர்வின் பெயர் | பாடப்பிரிவு (அறிவியல், கலை, தொழிற்கல்வி) | பயிற்று மொழி (தமிழ் /ஆங்கிலம்) | தேர்வு ஆண்டும் மாதமும் | தேர்வுப் பதிவெண் | பாடம் | பெற்ற மதிப்பெண் | உச்ச மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | கூடுதல்: | | |

9. குடியுரிமை : இந்தியர் /பிறர் (குறிப்பிடவும்)

10. குடியிருப்பு மண்டலம் :புதுச்சேரி/ காரைக்கால் / மாகி / ஏனாம்

11. இனம் :

1. அட்டவணை இனத்தவர்(SC) ☐
2. மிகவும் பிற்படுத்தப்பட்டோர்(MBC) ☐
3. அதிமிக பிற்படுத்தப்பட்டோர்(EBC) ☐
4. பிற பிற்படுத்தப்பட்டோர்(OBC) ☐
5. பிற பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) (BCM) ☐
6. பிற்படுத்தப்பட்ட பழங்குடியினர் (BT) ☐
7. மலைவாழ் இனத்தவர் (ST) ☐

12. சிறப்புப் பிரிவு

1. விடுதலைப் போராட்டவீரர்கள் வாரிசு(FF) ☐
2. மாற்றுத் திறனுடையோர்(PH) ☐
3. முன்னாள் இராணுவத்தினர் வாரிசு(Ex-Ser) ☐
4. சிறந்த விளையாட்டு வீரர்(MS) ☐

13. தமிழை மொழிப் பாடமாகப் பயின்ற இறுதி வகுப்பு :

14. முகவரி : ……………………………………………….

……………………………………………….

……………………………………………….

…………………………………………….

அஞ்சல் குறியீட்டு எண் : ……………………………………………….

தொலைபேசி எண். : ……………………………………………….

<u>உறுதிமொழி</u>

மேலே குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவையென உறுதி கூறுகிறோம்.

பெற்றோர் / பாதுகாவலர் ஒப்பம் விண்ணப்பதாரர் ஒப்பம்

இடம்:
நாள்:

| வரிசை எண் | சான்றிதழ் நகல்கள் | | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| 1. | கல்வி நிறுவன மாற்றுச் சான்றிதழ் | | |
| 2. | பத்தாம் வகுப்பு சான்றிதழ் | | |
| 3. | +2 மதிப்பெண் சான்றிதழ் | | |
| 4. | குடியிருப்புச் சான்றிதழ் | (அல்லது) 2020-ல் புதுப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த சான்றிதழ் (IC) | |
| 5. | குடியுரிமைச் சான்றிதழ் | | |
| 6. | இனச் சான்றிதழ் | | |
| 7. | சிறப்பு இட ஒதுக்கீட்டுச் சான்றிதழ் | | |